**கருவலகஸ்வெவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 08 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜூலை 26 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கருவலகஸ்வெவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் செய்யப்பட்ட பாலர் பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வயம்ப முன்பள்ளி சிறுவர் கல்விஅபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா. 120,000 மற்றும்அபிவிருத்திநடவடிக்கைகளுக்காக ஒப்பந்தம் செய்த நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா. 120,000 பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காண்டுக் உரிய கொடுக்கல் வாங்கல்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஏதிர்வரும் காலங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | எகொடபிடிய மலசலகூட செயற்றிட்டத்தின் நலன்பெறுவோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 370,000 ,சிறுகற்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டிய ரூபா. 120,000 மற்றும் வீதி விளக்கு உபகரணங்களைகொள்வனவு செய்வதற்காகசெலுத்த வேண்டிய ரூபா 33,800பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காண்டுக் உரிய கொடுக்கல் வாங்கல்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | கழிவு மத்திய நிலையத்திற்கு களஞ்சியம் ஒன்றை நிர்மாணிப்பதற்குமீளாய்வாண்டில் செய்யப்பட்ட செலவை மூலதனப்படுத்தும் போது நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூபா 79,912 மூலதனப்படுத்தப்படவில்லை. | மூலதன செலவு சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) பெற வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்குபெற வேண்டிய 05 கணக்குகளின் மீதிகளின் மொத்தம் ரூபா 3,002,574 ஆகும். அதில் 03 வருடத்திற்கு கூடிய மீதிகளின் மொத்தம் ரூபா 676,178 ஆக காணப்பட்டது. | பெற வேண்டிய கணக்குகளின் மீதிகளினை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வரிப்பணம், கூலி நீர் வரி மற்றும் பல்வேறு கடன்பட்டோரின் நிலுவைப்பணத்தின் ஒரு பகுதியை அறவிட முடிந்ததுடன் நிலுவைப் பணம் மற்றும் தொழில் கடன்பட்டோரிடம் விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு செலுத்த வேண்டிய 04 கணக்குகளின் மீதிகளின் மொத்தம் ரூபா 3,669,595 ஆகும். அதில் 03 வருடத்திற்கு கூடிய மீதிகளின் மொத்தம் ரூபா.1,213,317 ஆக காணப்பட்டது. | செலுத்த வேண்டிய கணக்குகளின் மீதிகளினை விரைவாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பல்வேறு கடன்கொடுத்தோர், தொழில் கடன்கொடுத்தோர், வருமானம் குறித்து வைப்பு மற்றும் பல்வேறு வைப்புகளின் ஒரு பகுதி செலுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதியை எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 5,036,950 பெறுமதியான 02 கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களிலுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் 571 ஆம் பிரிவு | 02 வருடங்களுக்கு மேற்பட்ட 19 வைப்புகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிகூற்றுகளில் வெளிப்படுத்தப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் எழுத்து மூல சான்று முன்வைக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதி மளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,024,927ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,366,445 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரியும் வரியும் | 5,715 | 4,400 | 4,895 | 1,461 | 5,347 | 3,866 | 4,393 | 1,490 |
| வாடகை | 2,601 | 2,346 | 6,914 | 573 | 1,807 | 1,483 | 1,571 | 213 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 242 | - | 84 | - | 468 | 149 | 149 | - |
| ஏனைய வருமானம் | 36,238 | - | 27,424 | - | 35,804 | - | 22,052 | 421 |
| மொத்தம் | 44,796 | 6,746 | 39,317 | 2,034 | 43,426 | 5,498 | 28,165 | 2,124 |

- ❖ சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் மீளாய்வாண்டின் வருமானத்தில் செய்யப்பட்ட சேகரிப்பு மற்றும் கடந்த வருடங்களின் நிலுவை வருமானத்தில் செய்யப்பட்ட சேகரிப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் ரூபா 6,746,372 மற்றும் வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை ரூபா.2,124,027ஆக காணப்பட்டதுடன்மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமானத்தில்சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 5,801,994 மற்றும் நிலுவை வருமானத்தில்ரூபா 1,536,018 | வருடாந்த வருமானங்களை அவ் வருடத்திற்குள் அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய வருடத்திற்குள் ஆக மொத்த வருமான சேகரிப்பு மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 83 சதவீதமாக இருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாவாண்டின் ஆரம்பத்தில் உள்ளபடியாக நிலுவை வீதவரி ரூபா 362,902 இல் ரூபா 106,100 சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது வருட ஆரம்பத்தில் உள்ளபடியாக நிலுவை வீதவரி வருமானத்தில் 29 சதவீதமாக இருந்தது.கருவலகஸ்வெவ நீர் செயற்றிட்டத்தில் நீர் விநியோகத்தை இடை நிறுத்திய நீர் பாவனையாளர்கள் 35 பேரின் நிலுவை நீர் கட்டணம் ரூபா 97,035 மற்றும் இபலோகம நீர் செயற்றிட்டத்தில் நீர் பாவனையாளர்கள் 71 பேரின் நிலுவை நீர் அங்கத்துவ கட்டணம் ரூபா 346,300 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தைவிரைவாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலுவைப் பணத்தில் ரூபா. 23,839 மற்றும்நீர் அங்கத்துவ கட்டணம் ரூபா. 200,711 மற்றும் நிலுவை நீர் அங்கத்துவ கட்டணம் ரூபா 203,150 அறவிடப்பட்டுள்ளது. மிகுதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வாடகை ரூபா 1,752,255 தொகையில் ஆண்டினுள் ரூபா 1,287,477 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், அது பட்டியலிடப்பட்ட தொகையில் 73 சதவீதமான அளவாகும். | நிலுவைப் கடை வாடகையினை துரிதமாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக குத்தகை வாடகை நிலுவைப் பணத்தில் ரூபா. 127,215 தொகை 2019 மார்ச் 31 ஆந் திகதி வரை சேகரிக்கப்பட்டுள்ளது. மிகுதி நிலுவையாகவுள்ள பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரின் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 675,996 ஆகும். | அனைத்து நீதிமன்ற தண்டப்பணத்தையும் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தில் ரூபா 675,996 இல் ரூபா 376,998 2019 மே மாதம் 03 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ்பிரதான காரணங்கள் 30 இனை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும்காரணங்கள் 03 குறித்து மட்டுமே உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | உரிய பிரதான காரணங்கள் அனைத்தும் குறித்து உப விதிகள் விதிக்கப்படவேண்டும். | எதிர்காலத்தில் தேவையான அனைத்து காரணங்களுக்காகவும் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) ஏற்பாடு செய்யப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைய சபையினால் செய்யப்பட வேண்டிய ஏற்பாடு ரூபா.110,000 ஆன போதிலும் | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைய | 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்டவாறு சேவையிலுள்ள சுகாதார |

| | | |
|---|---|---|
| 03 காரியங்களுக்காக வருடாந்த வரவு செலவு திட்டம் மூலம் ஏற்பாடு செய்யப்படாமையால் அப்பணிகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமை. | நிறைவேற்ற வேண்டியகாரியங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகளை நிறைவேற்றநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொழிலாளிகள் குறித்து பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதற்காக ஏற்பாடு தேவை எனினும் விளையாட்டு மைதானம்,விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு அலுவல்கள் குறித்து ஏற்பாடு அவசியமில்லை. |

**(இ) பணிப்பொறுப்புகளை நிறைவேற்றறாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாவாண்டின் வருடாந்த வரவு செலவு திட்டம் மூலம் ரூபா 42,780,000 ஏற்பாடு செய்யப்பட்ட காரியங்கள் 16 வருடத்தினுள் செய்யப்படவில்லை. | வருடாந்த வரவு செலவு திட்டம் தயாரிக்கும் போது உண்மையாக செய்யப்படவேண்டிய மற்றும் தேவையை இனங்கண்டுவரவு செலவு திட்டம் தயாரிக்கும் பணியை செம்மையாக நிறைவேற்ற வேண்டும். | வரவு செலவு திட்ட ஆலோசனைகளினுள் சபை நிதிய செயல்திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றக்கூடியவாறு போதிய வருமானம் சபைக்கு இல்லாது போனதும் மாகாண சபை மற்றும் மாகாண நிர்வாக அமைச்சின் ஆதாரங்கள் மற்றும் மாகாண ரீதியான மானியங்கள் எதிர்பார்த்தவாறு கிடைக்காமை காரணமாகவரவு செலவு திட்டம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து காரியங்களையும் நிறைவேற்ற முடியாமை. |

**(ஈ) கைவிடப்பட்ட காரியங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரம்பாவெவ நீர் செயற்றிட்டத்தனை காலம் நீடிப்பதற்காக 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் ரூபா.1,149,000 செலவிடப்பட்டிருந்தாலும் 2018 ஏப்ரல் 29 ஆம் திகதிக்கும் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காது கைவிடப்பட்டிருந்தது. | செயற்றிட்டத்தனை நிறைவேற்றநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்றிட்டத்தின் மிகுதியான கட்டத்தை நிறைவேற்ற எந்தவொரு ஏற்பாடும் மாகாண சபை மற்றும் மாகாண நிர்வாக அமைச்சினால் செய்யப்படாமையால் |

| | | இதுவரை நீர் விநியோகம் செய்ய முடியவில்லை. |
|---|---|---|

**(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் ரூபா.1,338,227 மற்றும் 2018 ஆம் ஆண்டில் ரூபா.719,200 செலவிடப்பட்ட கழிவு முகாமைத்துவ செயற்றிட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் நகரத்தின் குப்பைகளை சேகரித்து அகற்றுவது தவிர கழிவு மீள்சுழற்சி செய்யும் முறையொன்று தொடங்கப்பட்டிருக்கவில்லை. | கழிவு மீள்சுழற்சி மற்றும் கழிவகற்றும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டியமை. | இயற்கை பசளை உற்பத்திக்கு தேவையான உக்கக்கூடிய கழிவுகள் சேராமை மற்றும் அதற்கு அவசியமான உபகரணங்கள் இல்லாமையால் இயற்கை பசளை உற்பத்தி செய்யப்படவில்லை. |

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த “நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030”படி சபையினால்நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் 12 இனங்காணப்பட்டு அந்தநோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடையும் பல நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்படடிருந்தது. மீளாய்வாண்டினுள் வாரச்சந்தை நடத்துவது மூலம் பிரதேச எல்லைக்குட்பட்ட உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு வாய்ப்பு வழங்குதல் மற்றும் கழிவு முகாமைத்துவத்தை செயல்திறனாக்கல் மற்றும் இயற்கை அபாயங்கள் குறித்து மானியம் வழங்குதல் எனும் இலக்குகளின் கீழ் நடைமுறைப்படுத்த திட்டமிட்ட நடவடிக்கைகள் வருடத்தினுள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வாரச்சந்தை அமைந்துள்ள இடம் சனநடமாட்டமுள்ள இடமாக இல்லாமையும் வீதி முறை உள்ளிட்ட மற்றைய கீழ்கட்டமைப்பு வசதிகள் பலவீனமாக காணப்பட்டமை காரணமாக நுகர்வோர் வருகை தரவில்லை. ஆதலால் இவ்வாரச்சந்தை நடைபெறவில்லை. கழிவு முகாமைத்துவத்தை செயல்திறனாக்குவது குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், முறையற்ற வகையில் கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகளை குறைப்பது குறித்து விழிப்புணர்வூட்டும் சுவரொட்டிகள் பலகைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | அமைக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 799,122 செலவிடப்பட்டு கழிவு மத்திய நிலையத்தில் களஞ்சியமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இயற்கை அபாயங்கள் குறித்து மானியம் வழங்குதலின் கீழ் 2018 ஆம் ஆண்டில் நிலவிய கடும் வரட்சிக்கு முகம்கொடுப்பதற்கு ரூபா. 918,966 செலவிடப்பட்டு கிணறு ஒன்று கட்டப்பட்டு பொதுமக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடத்திற்குரிய கருவலகஸ்வெவ பொதுமக்கள் நூலகத்தில் நடத்திய கணக்கெடுப்பில் ரூபா. 50,264 பெறுமதியான 282 புத்தகங்கள் குறைவது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | நூலக புத்தகங்கள் குறைவது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இப்புத்தக தொகையில் ரூபா.24,024 பேறுமதியான 100 புத்தகங்கள் மீள கிடைக்கப்பெற்றன. அதற்கமைய உண்மையாக காணாமல் போனது ரூபா. 26,240 பெறுமதியான 182புத்தகங்கள் மட்டுமே ஆகும். அதற்கான பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | பக்கச்சுவர் இரண்டாம் கட்ட நிர்மாணம் குறித்து வாஸ்து சாஸ்திர திட்டம், உபாய திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் குறித்து 2015 மற்றும் 2017 ஆண்டுகளில் ஆலோசக பொறியியலாளர் கொடுப்பனவாக ரூபா.400,000 செலவிடப்பட்டிருந்தாலும் உரிய செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படாமையால் | செயற்றிட்டத்தை செயற்படுத்தும் நிலைக்கு கொண்டுவந்து வருமானம் ஈட்டும் ஒன்றாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பக்கச்சுவர் கட்ட நிர்மாண மதிப்பீடு செய்வதற்காக தனியார் துறையின் உதவி பெறப்பட்டுள்ளதுடன் எதிர்காலங்களில் விலைமனு கோரப்பட்டு தெரிவு செய்த நபருக்கு வருடாந்த |

| | | | |
|---|---|---|---|
| | அச்செலவு செயற்படாத செலவாக இருந்தது. | | குத்தகைக்கு வழங்க ஆலோசிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | பின்னடைந்த மற்றும் கைவிடப்பட்ட கம்மான செயற்றிட்டம் 2017 இன் கீழ் ஒல்லுக்குழிய கிணறை அமைத்தல், கிணற்றைச் சுற்றி வேலி கட்டுதல் மற்றும் உட்பிரவேசிக்கும் பாதையை நிர்மாணித்தல் குறித்து ரூபா.1,089,055 செலவிடப்பட்டிருந்ததுடன் தனியார் இடமொன்றில் இந்நிர்மாணத்துடன் கூடிய காணி சபைக்கு சொந்தமாக்கப்படவில்லை. | உரிய காணியை சபைக்கு சொந்தமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பின்னடைந்த மற்றும் கம்மான செயற்றிட்டம் 2017 இன் கீழ் ஒல்லுக்குழிய கிணறு கட்டப்பட்ட இடத்தை சட்டத்தின் கீழ் சபைக்கு சொந்தமாக்குவதற்கு அளவைகள் உத்தரவு கோரி கருவலகஸ்வெவ பிரதேச சபையின் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டாம் நிலையிலுள்ள நூலக பொறுப்பாளர் பதவி 03, அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி 01,தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியொன்று, முன்பள்ளி ஆசிரியர் பதவி 01, தளப் பரிசோதகர் பதவி 01, வருமானப் பரிசோதகர் பதவி 01மற்றும்ஆரம்ப நிலைக்குரிய ஓட்டுனர் பதவி 01, அலுவலக தொழிலாளர் பதவி 03 மற்றும் நூலகஉதவியாளர்பதவி 03 மாக வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிடத்திற்காக தகைமைவாய்ந்த உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டாம் நிலையிலுள்ள பதவிகளில் செயலாளர் பதவி மற்றும் வருமானப் பரிசோதகர் பதவி வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்பட்டுள்ளது. ஏனைய வெற்றிடங்கள் மீண்டும் வட மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு மூலம் நிரப்பப்படும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் ரூபா 18,000,000 செலவில் கட்டப்பட்ட நீல மதில் விடுமுறை விடுதி மற்றும் வார சந்தை இரண்டும் விளைவற்று காணப்பட்டது. | வளங்களின் உச்ச பயன்பாடு பெறுவதற்கான முறையான | நீல மதில் விடுமுறை விடுதியை அமைத்து பராமரிப்பதற்காக தனியார் துறையின் |

| | | |
|---|---|---|
| | நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட வேண்டும். | பங்களிப்பை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் உரிய இடத்திற்கு விலை மனு கோரப்பட்டு வருடாந்த குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ள து. வாரச்சந்தை அமைந்துள்ள இடம் சன நடமாட்டமுள்ள இடமாக இல்லாமையும் வீதி முறை உள்ளிட்ட மற்றைய கீழ்கட்டமைப்பு வசதிகள் பலவீனமாக காணப்பட்டமை காரணமாக நுகர்வோர் வருகை தரவில்லை. ஆதலால் இவ்வாரச்சந்தை நடைபெறவில்லை. |

**3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான கட்டிடங்கள் அமைந்துள்ள 10 காணிகள் மற்றும் சபையினால் நிர்வாகித்து நடாத்திச் செல்லப்படும் விளையாட்டு மைதானமங்கள் மற்றும் வாரச்சந்தை நிலங்களின் உரிமையை சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தினை சபைக்கு சொந்தமாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சபைக்கு சொந்தமான காணிகளில் இதுவரை 03 காணிகள் அளவை செய்யப்பட்டு முடிந்துள்ளதுடன் மிகுதி காணிகள் அளவை செய்யப்பட்டு உரிமையை சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.5 பெறுகைகள்

**பெறுகைகள் திட்டம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டுகளைப் போலவே மீளாய்வாண்டிலும் பெறுகை நடவடிக்கைகளை நிறைவேற்றுவதங்காக பெறுகைகள் திட்டமொன்று தாயரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுநிருபத்திற்கு அமைய வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தாயரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில்பெறுகைகள் திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தாலும் ஒப்பந்தங்கள், வங்கி கணக்கிணக்கக் கூற்று, ஊழியர் கடன், நிலையான சொத்து, கையிருப்பு மற்றும் வாகன நிர்வாகம் தொடர்பாக உள்ளக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு திட்டத்திற்கு அமைய உள்ளக கணக்காய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது கணக்காய்வில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டு உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறிப்பிடுகிறேன். |